வென்ற்வேத்வில் தமிழ்க்கல்வி நிலையம்

WENTWORTHVILLE

TAMIL STUDY CENTRE

# தமிழ் அறிவுப் போட்டி 2019

## ஆண்டு 10 (உயர் தரம்)

## மாதிரி வினாக்கள்

Quiz Sample Questions 2019 - Year 10

1. “இளமையிற் கல்வி சிலையில் எழுத்து”

என்ற பழமொழியின் பொருளைக் கூறுக?

**விடை:**

இளம் வயதில் கற்கின்ற கல்வி

கல்லில் வெட்டப்பட்ட எழுத்துப் போல

எப்பொழுதும் அழியாமல் இருக்கும்

2. உ. வே. சாமிநாதையரின் தமிழ்ச் சேவை ஒன்றைக் கூறுக?

**விடை:**

பழைய தமிழ் இலக்கியங்களைப் பதிப்பித்தர்.

(- தமிழாசிரியராகக் கடமையாற்றினார்

- பழைய தமிழ் ஏட்டுச் சுவடிகளையும், கையெழுத்து ஏடுகளையும் சேகரித்தார்)

3. இந்த இசைக் கருவியின் பெயர் என்ன?



**<u>விடை:</u>**

# பறை

4. கடலும் கடல் சார்ந்த இடமும் எவ்வாறு அழைக்கப்படும்?

**விடை:**

# நெய்தல்

5. இடையின மெய் எழுத்துக்கள் எவை?

**<u>விடை:</u>**

# ய் ர் ல் வ் ழ் ள்

6. ஐம்பொறிகளும் எவை?

**விடை:**

# மெய் (உடல்)

# வாய்

# கண்

# மூக்கு

# செவி (காது)

7. பின்வரும் திருக்குறளை நிறைவு செய்க?

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்

---------------------------------------------

**<u>விடை:</u>**

**சான்றோன் எனக்கேட்ட தாய்.**

**ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**<u>சான்றோன் எனக்கேட்ட தாய்.</u>**

8. தமிழில் ஐம்பெருங் காப்பியங்களும் எவை?

**<u>விடை:</u>**

**சிலப்பதிகாரம்**

**மணிமேகலை**

**வளையாபதி**

**குண்டலகேசி**

**சீவகசிந்தாமணி**

9. தமிழர் பண்பாடுகள் மூன்றினைக் கூறுக?

விடை:

தாய் தந்தையரைப் பேணுதல்

வந்தாரை வரவேற்று விருந்தோம்புதல்

பிறருக்கு உதவுதல்

(பெற்றோர்களையும், பெரியோரையும், ஆசிரியர்களையும் மதித்தல்)

10. தமிழிசைக் கருவிகளை மூன்று வகையாகப் பிரிப்பர். அவை எவை?

**<u>விடை:</u>**

**துளைக் கருவி**

**தோற் கருவி**

**நரம்புக் கருவி**

11. நீச்சலிற்கான ‘கின்னஸ் உலக சாதனை’ படைத்த தமிழ் நீச்சல் வீரர் இருவரின் பெயர்களைக் கூறுக?

**விடை:**

1. **V S குமார் ஆனந்தன் / ஆழிக்குமரன் ஆனந்தன்**

2. **குற்றால் ரமேஸ் / குற்றாலீஸ்வரன்**

12. நிகழ்ச்சி ஒன்றை முதன்முதலில் மேடையேற்றுவதை எப்படி அழைப்பார்கள்?

**<u>விடை:</u>**

# அரங்கேற்றம்

13. அவுஸ்திரேலியப் பாராளுமன்றத்தில் உள்ள சபைகள் இரண்டும் எவை?

**<u>விடை:</u>**

# பிரதிநிதிகள் சபை

# மேற் சபை

14. சிலப்பதிகாரத்தில் உள்ள மூன்று காண்டங்களும் எவை?

**விடை:**

# புகார் காண்டம்

# மதுரைக் காண்டம்

# வஞ்சிக் காண்டம்

15. ‘புல் + நுனி’ சேர்த்துக் கூறுக?

**விடை:**

**புன்ஞனி**

16. குற்றெழுத்துக்கள் (குறில்) எவை?

**<u>விடை:</u>**

# அ இ உ எ ஒ

17. மூவேந்தர்களில் மதுரையை ஆண்ட மன்னர்களின் வம்சம் எது?

விடை:

# பாண்டிய வம்சம் (பாண்டியர்கள்)

18. ஈழத்திலே தமிழர்களின் உரிமைக்காக உண்ணா விரதம் (நோன்பு) இருந்து இருவர் உயிர்த்தியாகம் செய்தனர். அவர்களில் ஒருவரின் பெயரைக் கூறுக?

**<u>விடை:</u>**

# திலீபன் / பார்த்தீபன்

# (அன்னை பூபதி / பூபதி )

19. ஐவகை நிலங்களும் எவை?

**விடை:**

குறிஞ்சி

முல்லை

மருதம்

நெய்தல்

பாலை

20. நான்கு பக்கங்களும் கடலாற் சூழப்பட்ட சிறிய நிலப்பரப்பை எப்படி அழைப்பர்?

**<u>விடை:</u>**

**தீவு**

21. திருக்குறளின் மூன்று பாகங்கள் (மூன்று பால்கள்) எவை?

**விடை:**

அறம்

பொருள்

இன்பம் (காமத்துப் பால்)

22. சுட்டெழுத்துக்கள் மூன்றும் எவை?

**<u>விடை:</u>**

**அ - இ - உ**

**(அவன் - இவன் - உவன்)**

23. வானவில்லில் உள்ள ஏழு நிறங்களும் எவை?

**விடை:**

# ஊதா, கருநீலம், நீலம், பச்சை,

# மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு.

24. அவர்கள் என்ற பன்மைச் சொல்லின் ஒருமை வடிவம் எது?

**விடை:**

# அவன் / அவள்

25. உயர் திணையிலுள்ள

மூன்று பால்களும் எவை?

**<u>விடை:</u>**

# ஆண் பால்

# பெண் பால்

# பலர் பால்